# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2042/23 - 2017 ඔක්තෝබර් මස 26 වැනි බ්‍රහස්පතින්දා - 2017.10.26

*2042/23 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 26 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குறிப்பு இல.: KDS/AKU/4/2/1/52.

காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சின் குறிப்பு இல.: 4/3/9/2015/WS/111.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

மத்திய மாகாணத்தின் கண்டி மாவட்டத்தில், அக்குறணை பிரதேச செயலாளர் பிரிவில், உடகம்பக கோரலே உப பிரிவில், திப்பிடிய கிராம அலுவலர் பிரிவில், திப்பிடிய கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவை அதிகாரியினால் 2017.08.23 ஆந் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட, இல. மஹ/6729 அடிப்படை வரைபடத்தில் துண்டு இலக்கம் 01 எனக் குறிப்பிடப்பட்ட 0.0379 ஹெக்டயார் விசாலமான தலஹேனவத்த எனும் காணியின் கீழ் விபரிக்கப்பட்ட காணித்துண்டு:

**துண்டு இல. 01 - காணியின் பெயர்:** தலஹேனவத்த; **விஸ்தீரணம்: 0.0379 ஹெக்டயார்.**

வடக்கு: பிரதேச சபைப் பாதை; கிழக்கு: பிரதேச சபைப் பாதை மற்றும் டி. ஜி. பியசேன உரிமை கோரும் தலஹேன; தெற்கு: டி. ஜி. பியசேன உரிமை கோரும் தலஹேன மற்றும் பிரதேச சபைப் பாதை; மேற்கு: பிரதேச சபைப் பாதை.

**உரிமை கோருவோர்:** டி. ஜி. பியசேன, இல. 600, திப்பிடிய, அலவதுகொட.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2017 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 21 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு அக்குறணை பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 21 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

மாதவ வர்னகுலசூரிய,
பிரதேச செயலாளர்,
அக்குறணை.

பிரதேச செயலகம்,
அக்குறணை,
2017, ஒற்றோபர் 22.

*11 - 553*

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: DIVPANN/LND/ACDEP/1/4/9.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2007 ஆம் ஆண்டு யூலை மாதம் 09 ஆந் திகதிய 1505/6 ஆம் இலக்கங் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தலில் காட்டப்பட்ட காணியின் விஸ்தீரணம் 0.0632 ஹெக்டயார் என்பதற்குப் பதிலாக விஸ்தீரணம் 0.0630 ஹெக்டயார் என்பது திருத்தல் வேண்டும் என்பதையும்,

மேற் குறித்த வர்த்தமானி அறிவித்தலில் இறுதிக் கிராம வரைபட இல. 323 இல் துண்டு இலக்கம் 51 என்பதற்குப் பதிலாக இறுதிக் கிராம வரைபட இல. 323 இல் துண்டு இலக்கம் 52 என்று திருத்தல் வேண்டும் என்பதையும்,

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2017 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 13 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு பன்னல பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2017 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 06 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ஆர்.எம்.எஸ். விக்கிரமரத்ன பண்டார,
பிரதேச செயலாளர்,
பன்னல.

பிரதேச செயலகம்,
பன்னல.

11 - 554

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.